# அம்பாந்தோட்டை நகர சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2011 ஜனவரி 01 தொடக்கம் ஒக்டோபர் 31 வரையிலான காலப்பகுதிக்குரிய நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜனவரி 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுன் 10 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 10 மாத மீளாய்வு காலப்பகுதிக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியன்று தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, அம்பாந்தோட்டை நகர சபையின் 2011 ஜனவரி 01 தொடக்கம் 2011 ஒக்டோபர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதியின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறான அம்பாந்தோட்டை நகர சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற காலப்பகுதிக்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஜனவரி 01 தொடக்கம் 31 ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டண வருவாயாகிய ரூபா 928,123 கணக்கிலிடப்படவில்லை. 2010 ஆம் ஆண்டின் பொருட்டு பெறப்பட்ட ரூபா 106,000 இக் கணக்கீட்டுக் காலப்பகுதிக்குரிய வருவாயாக செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஜனவரி 01 தொடக்கம் 2011 ஒக்டோபர் 31 வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 85,875 வருவாயில் செலவு வைக்கப்படவில்லை. 2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ) அம்பாந்தோட்டை சினிமா அரங்கை குத்தகைக்கு வழங்கியதால் 2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 234,369 கணக்கில் காட்டப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 44,276,945 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 ஜனவரி 01 தொடக்கம் 2011 ஒக்டோபர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்குரிய சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 759,185 ஆகும். முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ: செலவினம் ரூபா 1,332,276 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வு காலப்பகுதிக்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 3,115 | 1,675 | 1,699 |
| (ii) | குத்தகை வாடகை | 5,980 | 207 | 2,437 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 609 | - | - |
| (iv) | பிற வருவாய் | 3,995 | - | 393 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை, வரி என்பவற்றினது நிலுவை ரூபா 1,841,434 ஆகும். தீர்வை வரி என்பவற்றினது நிலுவையை அறவிடுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 கடை வாடகை

2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு 36 கடைகளிலிருந்து நிலுவையாக உள்ள வாடகையான ரூபா 206,790 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

அம்பாந்தோட்டை மஜிஸ்டிரேட் நீதிமன்றம் மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து 2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத்தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 1,013,998 கூட்டுத்தொகை பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.3 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

இரண்டு டிறக்டர்களும் ஒரு மோட்டார் சைக்கிளும் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் 2003 ஜனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை

**2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) சுனாமியால் பாதிப்படைந்த கத்தோலிக்க மயானத்தின் எல்லை மதில் சுவரை நிர்மாணிப்பதற்கு தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து 2007 செப்டெம்பர் 04 ஆந் திகதியன்று பெறப்பட்ட ரூபா 75,536 அதற்கெனப் பயன்படுத்தப்படாது 2011 ஒக்டோபர் 31 ஆந் திகதியன்றும் வைப்புக் கணக்கிலிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) க்கமைய திருப்பிச் செலுத்த வேண்டியதும் காலம் கடந்ததுமான ரூபா 561,911 வைப்புகள் தொடர்பாக குறித்த பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையினது XII அத்தியாயத்தின் 5.1 மற்றும் 8.1 பிரிவுகளின் பிரகாரம் சபையின் 15 ஊழியர்கள் ஆண்டிற்குரிய சமயாசமய மற்றும் விடுமுறை லீவு எல்லைகளை மீறியவாறு அங்கீகாரமின்றி 823 நாட்கள் வேலைக்குச் சமூகமமளிக்காதிருந்தனர்.

**2.5 கணக்களிதன்மையும் சிறந்த ஆளுகையும்**

நிறுவனத்தின் தொலை நோக்கையும் பணிக்கூற்றையும் நிறைவேற்றுவதற்கான 3 ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டினைந்த திட்டமும் கூட்டினைந்த திட்டத்தில் உள்ளடக்கியவற்றை நிறைவேற்றுவதற்கான வருடாந்த செயல்திட்டமும் தயாரிக்கப்படவில்லை. நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்